தினமணி

## பனை, தென்னைகளைக் காக்கும் கொள்கை முடிவுகளை அரசு எடுக்க வேண்டும்

First Published : 30 Jan 2010 06:50:47 AM IST

கரூர், ஜன.29: பனை, தென்னை மரங்களைக் காக்கும் கொள்கை முடிவுகளை தமிழக அரசு எடுக்க வேண்டுமென தமிழ்நாடு கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் செ. நல்லசாமி கூறினார்.

இதுகுறித்து கரூரில் வெள்ளிக்கிழமை அவர் கூறியது:

கடந்த 2009 ஜன.29ம் தேதி தொடங்கிய கள் இறக்கும் போராட்டம் திட்டமிட்ட படி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கடந்த ஜன.21-ம் தேதி முதல் மீண்டும் தீவிரம் பெற்று வருகிறது. பனை, தென்னை மரங்களிலிருந்து இறக்கப்படும் கள்ளையும், கருப்பட்டியையும், தேங்காயையும் மூலப்பொருளாகக் கொண்டு மது தயாரிக்கலாம். இதை வலியுறுத்தி கள் இயக்கம் சார்பாக நடைபெறுவதாக இருந்த போராட்டம் 2010-11ம் ஆண்டிற்கான தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை, நீதியரசர் கே.பி. சிவசுப்பிரமணியம் குழுவின் அறிக்கைகளை எதிர்பார்த்து, போராட்டத்தைத் தாற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளோம்.

தமிழையும், பனையையும் பிரிக்க முடியாது. தமிழைக் காத்த பனை மரங்கள் தற்போது வேகமாக வெட்டப்பட்டு வருகின்றன. இவற்றைக் காக்க தமிழக அரசு கவனத்தை ஈர்க்கும் விதமாக கள் இயக்கம் சார்பில் பனை, தென்னை மரங்களில் கருப்புக்கொடி ஏற்றிப் பறக்கவிட முடிவு செய்துள்ளோம்.

எனவே, பனை, தென்னை மரங்களைக் காக்கும் ஒரு சில கொள்கை முடிவுகளை தமிழக அரசு உலகத்தமிழ் செம்மொழி மாநாடு நடத்துவதற்கு முன்பு நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இதன்படி, கள்ளை மதுபானப் பட்டியலிலிருந்து நீக்க வேண்டும். டாஸ்மாக் மதுபானங்கள் அனைத்தும் பனை, தென்னைப் பொருள்களிலிருந்து தயாரிக்கப்பட்டே விற்பனை செய்யப்பட வேண்டும்.

அமராவதி ஆற்றின் கிளை ஆறான பாம்பாற்றின் குறுக்கே கேரள அரசு அணை கட்டி வருகிறது.

மழைப் பிரதேசமான கேரளத்துக்குள் மழை மறைவுப் பிரதேசமான தமிழ்நாட்டிற்கு வரும் தண்ணீரை திருப்புவது இயற்கைக்கு மாறானது. இதில் மத்திய அரசு தலையிட்டு சுமூகத் தீர்வு காண வேண்டும். இந்தியாவிற்குள் இருக்கும் ஆறுகளை நாட்டுடமையாக்க வேண்டும். வளர்ந்த நாடுகளில் தடை செய்யப்பட்ட சாய சலவை, நூற்பு ஆலைகள், தோல் ஆலைகள், ரசாயன ஆலைகளுக்கு தமிழகத்திலும் தடை விதிக்க வேண்டும் என்றார் அவர்.

தமிழக விவசாயிகள் சங்கத் தலைவர் எம். மாரப்பன், கள் இயக்க அமைப்பாளர் இல. கதிரேசன், கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்க செயலர் ரா. தங்கராசு ஆகியோர் உடனிருந்தனர்.

## மேட்டூர் அணையில் அதிகாரி ஆய்வு

First Published : 30 Jan 2010 01:04:16 AM IST

மேட்டூர், ஜன.29: கர்நாடக அணைகளின் நீர் இருப்பு போதுமானதாக இருப்பதால் மழைக் காலங்களில் மேட்டூர் அணைக்கு நேரடியாக தண்ணீர் வரும் வாய்ப்பு உள்ளது என்று பொதுப் பணித் துறை கண்காணிப்பு பொறியாளர் கூறினார்.

பொதுப் பணித் துறையின் சேலம் கண்காணிப்பு பொறியாளர் கணேசமாரச்சன் வெள்ளிக்கிழமை மேட்டூர் வந்தார். மேட்டூர் அணையின் இருகரைகள், உபரிநீர்போக்கி கவர்னர் மாடம் ஆகியவற்றை பார்வையிட்டார். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் தானாக உயர்ந்த மதகினை மின்விசை மூலம் உயர்த்தி பார்த்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

டெல்டா மாவட்டங்களில் அறுவடைபணிகள் நடந்து வருவதால் வியாழக்கிழமை மேட்டூர் அணை மூடப்பட்டுள்ளது. கர்நாடக மாநிலத்தில் உள்ள நான்கு அணைகளிலும் போதுமானநீர் இருப்பு உள்ளது. அதனலா மழைபெய்யும்போது மேட்டூர் அணைக்கு விரைவாக தண்ணீர் வரும். தற்ப்போது மேட்டூர் அணையின் நீர் இருப்பும் கனிசமாக உள்ளது. அதனால் நடப்பு ஆண்டில் தண்ணீர் அதிகஅளவில் வரும் வாய்ப்பு உள்ளது. மேட்டூர் அணை ஜீன் 12-ல் திறப்பது குறித்து அப்போதை நீர் நிலவரத்தை கருத்தில் கொண்டு அரசு ஆலோசித்து முடிவு செய்யும். என்றார். மேட்டூர் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ரங்கநாதன், உதவிசெயற்பொறியாளர் குமாரசாமி, உதவிபொறியாளர் முருகேசன் ஆகியோர் உடனிருந்தனர்.

### பிப்.15ம் தேதி வரை தண்ணீர் திறந்துவிட வலியுறுத்தல்

First Published : 30 Jan 2010 06:59:55 AM IST

தஞ்சாவூர், ஜன. 29: தஞ்சாவூரில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க் கூட்டத்தில் விவசாயிகள் பிப்.15-ஆம் தேதி வரை சம்பாவுக்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட வேண்டுமென வலியுறுத்தினர்.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் எம்.எஸ். சண்முகம் தலைமையில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க் கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

சாமி. நடராஜன்: தஞ்சாவூர் மாவட்டத்தில் செங்கிப்பட்டி உள்ளிட்ட சில பகுதிகளில் சம்பா பயிரில் கதிர்கள் வந்தும், வாரத நிலையில் உள்ளதால் பிப்.15-ஆம் தேதி வரை மூடப்பட்ட மேட்டூர் அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிட வேண்டும்.

சம்பா அறுவடைக்கு ஆள்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. விவசாயிகள் அறுவடை இயந்திரத்தை நம்பியுள்ள நிலையில், இயந்திரம் வைத்துள்ளவர்கள் அறுவடைக்கு கூடுதல் தொகை கேட்கின்றனர்.

எனவே, தமிழக அரசு குறிப்பிட்டத் தொகையை அறுவடை இயந்திரத்துக்கு வாடகையாக தீர்மானிக்க வேண்டும். மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரி உள்ளிட்ட எந்த விதைகளையும் தமிழகத்தில் அறிமுகம் செய்யக் கூடாது.

வெ. ஜீவக்குமார்: கோடை நடவுக்கு அரசு விதைக் கிடங்குகளில் அதிசயப் பொன்னி எனப்படும் ஏடிடி 43-க்கு அடிப்படை விதைகள் கிடைக்கவில்லை. சான்றிட்ட விதைகள் தான் தனியார் விதை கடைகளில் கிடைக்கிறது. ஆனால், தரமான அடிப்படை விதைகள் கிடைப்பதில்லை.

எனவே, அரசுக் கிடங்குகளில் தடையில்லாமல் அடிப்படை விதைகள் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்வதுடன், விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு ஒருங்கிணைந்த வேளாண்மைத் துறை அலுவலகங்கள் தஞ்சாவூரில் ஒரே வளாகத்தில் நிறுவ வேண்டும்.

ஈரப்பதம் குறித்த எந்த நிபந்தனையும் இல்லாமல் தமிழக அரசு நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும். தஞ்சாவூர் மாவட்டத்தில் டீசல் மானியத் திட்ட அறிவிப்பை அமல்படுத்த வேளாண் துறை விரைவாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

ஏ.பி. சந்திரன்: மதுக்கூர் பகுதியில் கோடைப் பணப்பயிர் கடலை, உளுந்து மற்றும் எள் அதிகம் பயிரிடப்பட்டுள்ளதால் இப்பகுதியிலுள்ள வேளாண் அலுவலகங்களில் டிஏபி ஜிப்சம் மருந்து வகைகள் தட்டுப்பாடின்றி கிடைக்கவும், சர்க்கரை சாக்குகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு கிடைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

ஏ.கே.ஆர். ரவிச்சந்தர்: திருக்காட்டுப்பள்ளி சார் பதிவாளர் அலுவலகத்தில் காலியாகவுள்ள கணினி இயக்குநர் பணியிடத்தை விரைந்து நிரப்ப வேண்டும்.

பி. கோவிந்தராஜ்: வேளாண் பொறியியல் துறை விவசாயிகளுக்கு 50 சத மானியத்தில் ஆழ்குழாய் கிணறு அமைத்து கொடுக்க வேண்டும். வல்லம் ஸ்டேட் வங்கியில் கணினி சிட்டா கேட்காமல் கடன் கொடுக்க வேண்டும்.

வி.ஏ. சவரிமுத்து: கொப்பரை தேங்காய் கொள்முதலில் கிலோவுக்கு ரூ. 60 என நிர்ணயம் செய்வதுடன், விற்பனை செய்யப்படும் கொப்பரைக்கு தாமதமின்றி பணப் பட்டுவாடா செய்ய வேண்டும். உரித்தேங்காய் கொள்முதல் திட்டத்தை செயல்படுத்த வேண்டும்.

**வாழைத்தார் ஏலம் விவசாயிகளை வஞ்சிக்குது கூட்டுறவுச் சங்கம்**

First Published : 30 Jan 2010 12:57:01 AM IST

ஈரோடு, ஜன.29: கோபி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடைபெறும் ஏலத்திற்கு வாழைத்தார் கொண்டுவரும் விவசாயிகள் வஞ்சிக்கப்படுவதாக வாழை விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

ஈரோடு மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் மாவட்ட ஆட்சியர் ஆர்.சுடலைக்கண்ணன் தலைமையில் ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது (படம்). வேளாண்மை இணை இயக்குநர் கோபால் மற்றும் பல்வேறு துறைகளின் உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகளின் கோரிóக்கை விவரம்:

கீழ்பவானி பாசனத்திற்கு தண்ணீர் திறப்பதற்கு முன்பே வாய்க்கால் பராமரிப்பு பணிகளை முழுமையாக நிறைவேற்ற வேண்டும். நெல் கொள்முதல் நிலையங்களில் 65 கிலோ எடை ஒரு மூட்டையாக கணக்கிடப்பட்டுவந்தது. தற்போது 40 கிலோ எடை ஒரு மூட்டையாக கணக்கிடப்படுகிறது. இந்த எடை குறைப்பு காரணமாக மூட்டைக்கு ரூ.20 வரை விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படுகிறது. முன்பு இருந்த நடைமுறையிலேயே நெல் மூட்டைக்கான எடை அளவு இருக்கவேண்டும்.

தேங்காய் பருப்புக்கென அரசு சார்பில் தனி கொள்முதல் மையம் அமைக்க வேண்டும். ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் மஞ்சள் மாதிரி எடுத்தல் மற்றும் எடை போடுதல் உள்ளிட்டவற்றில் தற்போது பின்பற்றப்படும் நடைமுறைகளினால் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படுகிóறது. இந்த நடைமுறைகளை சீரமைக்க வேண்டும். நடவு மற்றும் அறுவடை பணிகளுக்கென அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நவீன விவசாய கருவிóகள் மற்றும் இயந்திரங்கள் அனைத்தையும் விவசாய பொறியியல் துறை மூலம் விவசாயிகளின் பயன்பாட்டுக்கு வாடகைக்கு அளிக்கவேண்டும். வேலை உறுதியளிப்பு திட்டத்தால் விவசாய பணிகளுக்கு ஆள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதனால் நடவு மற்றும் அறுவடை காலங்களிŀல் மட்டும் இந்த திட்ட செயல்பாட்டினை ஈரோடு மாவட்டத்தில் தற்காலிகமாக நிறுத்திவைக்க வேண்டும்.

பாசன கால்வாய்களின் கொப்பு வாய்க்கால்களில் உள்ள ஆக்கிரமிப்புகள், தாவரங்கள் படர்ந்துள்ளது போன்றவற்றால் நீரோட்டத்தில் தடை ஏற்பட்டு கடைமடை பகுதிகளுக்கு பாசன நீர் செல்வதில்லை. கூட்டுறவு வங்கிகளில் வழங்கப்படும் பயிர்க்கடன் அளவினை உயர்த்தி வழங்க உடனடியாக நடவடிக்கையெடுக்க வேண்டும். மும்முனை மின்சாரம் வழங்கப்படும் குறைவான நேரத்திலும் பெரும்பாலான நாட்களில் சீராக மின்விநியோகம் செய்யப்படுவதில்லை. இதனால் கிணற்று பாசன விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட நடவடிக்கையெடுக்க வேண்டும்.

கோபி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடைபெறும் வாழைத்தார் ஏலத்தில் விவசாயிகளின் நலன் முற்றிலுமாக புறக்கணிக்கப்படுகிறது. வியாபாரிகளுக்கு கூட்டுறவு சங்கம் மறைமுகமாக ஆதரவு அளிப்பதால் இங்கு வாழைத்தார் கொண்டுவரும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு பெருமளவில் இழப்பு ஏற்படுகிறது. பகிரங்க ஏலம் ரத்து, எடையின் அடிப்படையில் தார் விலை நிர்ணயம், சேவை கட்டண குறைப்பு உள்ளிட்ட விவசாயிகளின் நலன் காக்கும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டும்.

செம்மை நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு இதுவரை மானியம் வழங்கப்படவில்லை. பவானி ஆற்றில் நடைபெறும் மணல் திருட்டினை தடுக்க தனிக்குழு அமைக்க வேண்டும். பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் வழங்கப்பட்ட மானியத்துடன் கூடிய கடனுதவியில் கிணறு வெட்டியுள்ள விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கவேண்டும்.

மலை கிராம மக்களின் விவசாய நிலங்கள் மோசடியாக பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அவர்களது முன்னோர் பெயரில் உள்ள விளை நிலங்களை வாரிசுகளுக்கு பட்டா மாற்றம் செய்து தருவதன் மூலம் இந்த மோசடியினை தடுக்க முடியும். பிடி கத்தரிக்காய் பயிரிடுவது மற்றும் சந்தைப்படுத்துவதால் ஏற்படும் விளைவுகளை விவசாயிகள் அறிந்துகொள்ளும் வகையில் ஈரோட்டில் விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகளின் ஆலோசனைக் கூட்டம் நடத்த நடத்தவேண்டும் என்றனர்.

### நெல் ஈரப்பத சதவீதத்தை உயர்த்த வேண்டும்

First Published : 30 Jan 2010 07:02:03 AM IST

நாகப்பட்டினம், ஜன. 29: நெல் கொள்முதலுக்கான ஈரப்பத சதவீதத்தை உயர்த்த வேண்டும் என நாகை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர்.

நாகை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், மாவட்ட ஆட்சியரகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் ச. முனியநாதன் தலைமை வகித்தார்.

இக்கூட்டத்தில் விவசாயிகள் பேசியது :

வி. சரபோஜி : நேரடி நெல் கொள்முதல் நிலைய நடவடிக்கைகளை நெறிப்படுத்த வேண்டும். நெல் ஈரப்பத சதவீதத்தை உயர்த்த வேண்டும்.

முஜிபு ஷரீக் : வேதாரண்யம் வடமழை- மணக்காடு கிராமத்தில் தொடங்கப்படும் புதிய சிலிகேட் மணல் தொழில் சாலையால் ஏற்படும் சாதக, பாதங்களை ஆய்வு செய்து, பாதகம் இருந்தால் அந்தத் தொழில் சாலையின் உரிமத்தை ரத்து செய்ய வேண்டும்.

எஸ். சம்பந்தம் : தலைஞாயிறு கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்ட 2005-ம் ஆண்டு ரூ. 19.7 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், இதுவரை கட்டடம் கட்டப்படவில்லை. அதற்கான முதல்கட்ட பணிகள் கூட நடைபெறவில்லை. தற்போது, தலைஞாயிறு கால்நடை மருத்துவமனை செயலிழந்த நிலையில் உள்ளது. சீரமைப்பு நடவடிக்கை தேவை.

குரு. கோபிகணேசன் : சம்பா, தாளடி நெல் அறுவடைப் பணிகள் முடியும் வரை ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளை ஒத்திவைக்க வேண்டும். கூலித் தொழிலாளர்கள் பற்றாக்குறையைத் தவிர்க்கும் வகையில் 90 சதவீத மானியத்தில் நெல் அறுவடை இயந்திரங்கள் வழங்க வேண்டும்.

ஆ. அலெக்சாண்டர் : நேரடி நெல் கொள்முதல் நிலையப் பணிகளைக் கண்காணிக்க, விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழு அமைக்க வேண்டும். நெல் கொள்முதலுக்கான ஈரப்பத சதவீதத்தை 20-ஆக உயர்த்த வேண்டும்.

வி. தனபாலன் : ஏற்கெனவே விவசாயிகள் தூற்றி, சுத்தம் செய்து கொண்டு வரும் நெல்லை, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் மீண்டு தூற்ற வேண்டும் என கட்டாயப்படுத்துவதால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. எனவே, இதைத் தவிர்க்க உத்தரவிட வேண்டும்.

கே. எஸ். பாபு : மழையால் பாதிக்கப்பட்ட நிறம் குறைந்த நெல்லையும், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நிபந்தனையின்றி கொள்முதல் செய்ய உத்தரவிட வேண்டும்.

சோமு. இளங்கோ : தலைஞாயிறு பேரூராட்சிக்குள்பட்ட 4, 5-வது வார்டு பகுதிகளில் சாலைகள் சிதிலமடைந்த கிராமச் சாலைகளை தார் சாலையாக மாற்றி அமைக்க வேண்டும்.

சீர்காழி எம்.எல்.ஏ எம். பன்னீர்செல்வம் : சீர்காழி உப்பனாற்றுக் கரையை உயர்த்தி பலப்படுத்த வேண்டும்.

இயற்கை உரங்களைப்

பயன்படுத்த வேண்டும் : ஆட்சியர்

மாவட்ட ஆட்சியர் ச. முனியநாதன் : உணவு உற்பத்தி, மண் வளம் அதிகரிக்க விவசாயிகள் அனைவரும் இயற்கை உரங்களை அதிகளவில் பயன்படுத்தி சாகுபடி மேற்கொள்ள வேண்டும்.

நிகழாண்டில் 3 லட்சம் டன் நெல்லை கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை, 26,152 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கொள்முதலுக்கான ஈரப்பத சதவீதத்தை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் வழிகாட்டுதல் பெறப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும்.

மாவட்ட வருவாய் அலுவலர் ஆ. அண்ணாதுரை, வேளாண் துறை இணை இயக்குநர் ஆர்.வி. கருணாகரன், நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் விஸ்வநாதன், வேளாண் விற்பனைக் குழுத் தலைவர் அ. அம்பலவாணன் மற்றும் அலுவலர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**அடுத்த நிதியாண்டில்விலைவாசி குறையும்**


ஜனவரி 30,2010,00:00 IST



புதுடில்லி: "விவசாய பொருட்களின் விளைச்சல் அதிகரிப்பால், அடுத்த நிதியாண்டில் உணவுப் பொருட்களின் விலை குறையும்' என, மத்திய உணவு மற்றும் விவசாயத் துறை அமைச்சர் சரத் பவார் தெரிவித்தார்.இதுகுறித்து செய்திச் சேனல் ஒன்றிற்கு பவார் அளித்த பேட்டி:ஏப்ரல் 1ம் தேதி துவங்கும் அடுத்த நிதியாண்டு முதல், உணவுப் பொருட்களின் விலைகள் குறையத் துவங்கலாம். 2011 மற்றும் 2012 ஆகிய ஆண்டுகளில், உணவுப் பொருட்களின் அதிகப்படியான விளைச்சலால், அவற்றை என்ன செய்வது, எங்கு சேமிப்பது என்பதே, அரசின் கவலையாக இருக்கும். கடந்த 16ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில், உணவுப் பொருட்கள் பணவீக்கம், 17.40 சதவீதமாக இருந்தது. உணவுப் பொருட்களின் தேவை மற்றும் பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவினரின் வாங்கும் திறன் அதிகரிப்பு ஆகியவற்றால், அடுத்த பத்தாண்டுகளுக்காவது, பருப்புகள் மற்றும் சமையல் எண்ணெய் இறக்குமதி செய்ய வேண்டும்.இவ்வாறு சரத் பவார் கூறினார்.

**முட்டைக்கு மைனஸ் ரேட் வழங்கும் என்.இ.சி.சி., : அதிர்ச்சியில் புரோக்கர்கள், வியாபாரிகள்**

ஜனவரி 30,2010,02:30



நாமக்கல்: முட்டையின் தேவையைப் பொறுத்து, மைனஸ் ரேட் வழங்க என்.இ.சி.சி., முடிவு செய்வதால், முட்டை வியாபாரிகள், புரோக்கர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நாமக்கல் மாவட்டத்தில், 800க்கும் மேற்பட்ட கோழிப் பண்ணைகள் உள்ளன. இங்கிருந்து, தினமும், 2.50 கோடி முட்டைகள், நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும், வெளி நாடுகளுக்கும் அனுப்பப்படுகின்றன. இங்கு உற்பத்தி செய்யும் முட்டைகளுக்கு, நாமக்கல்லில் செயல்பட்டு வரும் தேசிய முட்டை விலை நிர்ணயக்குழு (என்.இ.சி.சி.,) விலை நிர்ணயம் செய்கிறது. வாரத்தில் மூன்று நாள் வீதம், விலை நிர்ணயம் செய்யப்படும். எனினும், கோழிப் பண்ணைகளில் முட்டை எடுக்கும்

புரோக்கர்கள், நிர்ணயம் செய்யப்பட்ட விலையில் இருந்து, சற்று விலையை குறைத்து முட்டை எடுப்பர். புரோக்கர்களின் ஆதிக்கம் காரணமாக, என்.இ.சி.சி., நிர்ணயம் செய்யும் விலை, கோழிப் பண்ணையாளர்களுக்கு கிடைக்காத சூழல் இருந்தது. இப்பிரச்னைக்கு தீர்வு காணும் விதத்தில், சில நாட்களாக நாள்தோறும் என்.இ.சி.சி., முட்டை விலை நிர்ணயம் செய்து வருகிறது. முட்டையின் தேவையைப் பொறுத்தும் மைனஸ் ரேட் வழங்குவதை, என்.இ.சி.சி., முடிவு செய்கிறது. இது முட்டை வியாபாரிகள், புரோக்கர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

முட்டை வியாபாரி ஒருவர் கூறியதாவது: இந்தியாவில் எந்த மாநிலத்திலும் முட்டைக்கு மைனஸ் ரேட் வழங்குவதில்லை. ஆனால், நாமக்கல் மாவட்டத்தில் காலம், காலமாக மைனஸ் ரேட் வழங்கப்பட்டுள்ளது. அதனால், என்.இ.சி.சி., ஒரு விலை நிர்ணயம் செய்தாலும் கூட, புரோக்கர்கள் ஒன்று கூடி, ஒரு விலையை நிர்ணயித்து பண்ணைகளில் முட்டை எடுப்பர். உதாரணத்துக்கு, முட்டை 260 காசுக்கு விற்பனையானால், 40 முதல் 50 பைசா வரை, முட்டையை விலை குறைத்து பண்ணைகளில் புரோக்கர்கள் கொள்முதல் செய்வர். பின், அந்த முட்டையை மூன்று ரூபாய் வரை விற்பனை செய்வர். இதனால், முட்டை விலை உயர்ந்தாலும் பண்ணையாளர்களுக்கு பெரிய அளவில் லாபம் கிடைக்கவில்லை. முட்டை விலையுடன் வாடகை கொடுத்தால், வியாபாரிகள் பயனடைவர். அதே நேரத்தில் முட்டையை வாங்கும் வியாபாரிகள், அதை கேரளா போன்ற வெளி மாநிலங்களுக்கு கொண்டு செல்லும்போது, ஒரு நாள் ஆகிவிடும். தற்போது, நாள்தோறும் முட்டை விலை நிர்ணயம் செய்வதால், முட்டை விற்பனைக்கு கொண்டு செல்லும் சமயத்தில், அதன் விலை குறைந்தால், அது வியாபாரிகளின் கையை கடிக்கும் விதத்தில் அமையும். விலை உயர்ந்தால் வியாபாரிகளுக்கு லாபம் கிடைக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

**மல்லிகை விலை சரிவு**

திண்டுக்கல்:அதிக பனிப்பொழிவால், பல பூக்களின் விளைச்சல் குறைந்துள்ளது. வியாபாரிகள் வரத்து குறைவால் கடந்த வாரம் அனைத்து பூக்களின் விலையும் குறைந்திருந்தது. ஒரு கிலோ மல்லிகை, கனகாம்பரம் 200 ரூபாய்க்கும், காக்கரட்டான் 40க்கும், சம்மங்கி 50க்கும் விற்கப்பட்டது.

முகூர்த்த நாளாக இருந்ததால், பூக்களின் விலை கூடியது.ஒரு கிலோ மல்லிகை ஆயிரம் ரூபாயாகவும்கனகாம்பரம் 700 ஆகவும் அதிகரித்திருந்தன. இது குறித்து வியாபாரி ஒருவர் கூறுகையில் ஜன. 26ல் விலை அதிகரித்த பூக்கள், தற்போது வெகுவாக சரியதுவங்கி யுள்ளன. இருப்பினும் தைப்பூச விழா காரணமாக, ஓரளவு விவசாயிகள் பாதிக்கும் அளவிற்கு குறைய வாய்ப்பில்லை" என்றார்.நேற்றைய நிலவரப்படி, மல்லிகை 350, கனகாம்பரம் 300, காக்கரட்டான் 170, சம்மங்கி 90, ஜாதிப்பூ 300, அரளி 50, ரோஜா 30 விற்றது.

**மூடப்பட்ட பால் சொசைட்டியால் பால் உற்பத்தியாளர்கள் பாதிப்பு**

குஜிலியம்பாறை:ஆர்.வெள்ளோட்டில் மூடப்பட்ட கூட்டுறவு பால் சொசைட்டியைமீண்டும் திறக்க வேண்டுமென, பால் உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஆர்.வெள்ளோடு சுற்றுப்பகுதியில் 20-க்கும் மேற்பட்ட குக்கிராமங்கள் உள்ளன. விவசாயிகள் நிறைந்த இப்பகுதியில், கால்நடை வளர்ப்பே முக் கிய தொழிலாக உள்ளது. பால் உற்பத்தியாளர்களின் நலன் கருதி, ஆர். வெள்ளோட்டில் கூட்டுறவு பால் சொசைட்டி நீண்ட காலமாக செயல்பட்டு வந்தது.

நல்ல நிலையில் இயங்கி வந்த சொசைட்டி, ஓராண்டிற்கு முன்பு திடீரென மூடப்பட்டது. இதனால் பால் உற்பத்தியாளர்கள், தாங்கள் உற்பத்தி செய்யும் பாலை தனியார் நிறுவனங்களுக்கு குறைந்த விலைக்கு விற்கும் நிலை உள்ளது. இப்பகுதியில், கூட்டுறவு சொசைட்டியை மீண்டும் திறந்தால், தினமும் காலை, மாலை என இரு நேரமும் 800 லிட்டர் பால் கொள்முதல் செய்யும் வாய்ப்புள்ளது. இதனால் விவசாயிகளும் பயனடைவர்.

இப்பகுதியில் கூட்டுறவு சொசைட்டி இல்லாததால், உற்பத்தி செய்யும் பாலை மிக குறைந்த விலைக்கு விற்கும் நிலை உள்ளதாக பால் உற்பத்தியாளர்கள் குமுறுகின்றனர்.

இது குறித்து பொன்னம்பட்டியை சேர்ந்த பால் உற்பத்தியாளர், சண்முகம் கூறும்போது; எங்களது வீட்டில் கறவை மாடுகளை வளர்த் துத்தான் பிழைப்பு நடத்துகிறோம். இங்கு ஒரு கூட்டுறவு சொசைட்டி இருந்தால், கூடுதல் விலையும், கடன் வசதிகளும் பெற வாய்ப்புள்ளதாக இருக்கும் என்றார்.

**பயறு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு அரசு மானியம்**

திருப்பரங்குன்றம்:திருப்பரங்குன்றம் பகுதிகளில் பயறு சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகளுக்கு அரசு மானியம் வழங்கப்படும். என வேளாண்மை உதவி இயக்குனர் செல்வன் தெரிவித்தார். அவரது அறிக்கை: திருப்பரங்குன்றம் வட்டாரத்தில் தென்மேற்கு பருவமழை முற்றிலும் பொய்த்த நிலையில், வடகிழக்கு பருவமழையும் சரிவர பெய்யவில்லை.

நிலையூர் கால்வாய் பாசன பகுதிகளில் நெல் விவசாயத்திற்கு ஒரு போகத்திற்குகூட போதுமான தண்ணீர் இல்லை. இப்பகுதிகளில் பயறு சாகுபடியில் பசுமை புரட்சி ஏற்படுத்த திட்டம் உள்ளது. அதன்படி திருப்பரங்குன்றம், நிலையூர், கீழக்குயில்குடி, வடிவேல்கரை, பெரிய ஆலங்குளம், ஒத்தை ஆலங்குளம், வேடர்புளியங்குளத்தில் பயறு சாகுபடிக்கு செய்ய விவசாயிகள் முன்வரவேண்டும். முழுமானியம் வழங்கப்படும். தென்பழஞ்சியில் விதைகிராம திட்டத்தில், 10 ஏக்கரில் பயறு விதைப்பண்ணை அமைக்கப்பட உள்ளது.

சின்ன உடைப்பு கிராமத்தில் ஏழரை ஏக்கரில் தெளிப்பு நீர் பாசனத்தில் துவரை சாகுபடி செய்யவும், விளாச்சேரியில் 62.5 ஏக்கர் பயறு சாகுபடி செய்யவும் விவசாயிகள் முன்வந்துள்ளனர். தெளிப்பு நீர் பாசனமுறையில் பயறு சாகுபடி செய்ய விரும்புபவர் களுக்கு 2.5 ஏக்கருக்கு ரூ. 7500 அரசு மானியமாகவும், பயறு விதை கிலோவுக்கு ரூ. 20 மானியம், டி.ஏ.பி., உரம் 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.

பயறு சாகுபடி செய்ய விரும்புகிறவர்கள், திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் உள்ள (திருநகர் 2வது பஸ் ஸ்டாப்) வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நேரிலோ, 99939 30375, 9994874372 ல் தொடர்பு கொள்ளலாம், என தெரிவித்துள்ளார்.

**விவசாய இயந்திரங்கள், கருவிகளை இயக்க பயிற்சி**

மதுரை:""விவசாயிகளுக்கு வேளாண்மை இயந்திரங்கள், கருவிகளை இயக்குதல் தொடர்பான பயிற்சி நடத்தப்பட உள்ளது,'' கலெக்டர் மதிவாணன் தெரிவித்துள்ளார். அவரது அறிக்கை: விவசாய பணிகளான உழவு, நடவு, களைஎடுப்பு, பயிர் பாதுகாப்பு, கதிர் அறுவடை போன்ற பணிகளை நல்ல முறையில் செயல்படுத்த இயந்திரங்கள், கருவிகளை பயன்படுத்த, பராமரிக்க பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

15 நாள் நடக்கும் பயிற்சியில் அலங்காநல்லூர் யூனியன் அலுவலகத்தில் பிப். ஜன. 28 முதல் பிப். 11 வரை நடக்கும். மேலூர் தாலுகா கிடாரிப்பட்டி கிராம சமுதாய கூட்டம், பேரையூர் தாலுகாவில் எழுமலை சிதம்பரம் சினிமா தியேட்டரிலும், திருமங்கலம் தாலுகா கள்ளிக்குடி வாலகுரு ரைஸ்மில்லில் பிப். 1 முதல் 15 வரையும் நடக்க உள்ளது.

பயிற்சியில் சேர 20வயது முதல் 40 வயதுள்ள விவசாயிகள் பங்கேற்கலாம். விருப்பமுள்ளவர்கள், "உதவி செயற்பொறியாளர், (தமிழ்நாடு பாலிடெக்னிக் அருகில்), 60, திருப்பரங்குன்றம் ரோடு, மதுரை-11' என்ற முகவரி அல்லது 0452- 267 7990 ல் தொடர்பு கொள்ளலாம்.

**செம்மை நெல் சாகுபடி பயிற்சி**

மதுரை:மதுரை விவசாயக் கல்லூரி உழவியல் துறை சார்பில், நீர், நிலவளத்திட்டத்தின் கீழ், அலங்கம்பட்டி கிராம விவசாயிகளுக்கு, செம்மை நெல் சாகுபடி அளிக்கப்பட்டது. நாற்றங்கால் தயாரிப்பு, நடவு, குறைந்த அளவு விதை, ஒற்றை நாற்று சதுர நடவு முறைகள் குறித்து, பேராசிரியர் பால்பாண்டி பேசினார். நோய் மேலாண்மை மற்றும் விதை நேர்த்தி குறித்து பேராசிரியர் சீனிமோகன் விளக்கினார்.

உருளும் களைக் கருவி கொண்டு களை நிர்வாகம் செய்தல் மற்றும் சிக்கன நீர் மேலாண்மை குறித்து பேராசிரியர் வீரபத்திரன் தெரிவித்தார். நெல்சாகுபடி அனுபவங்கள் குறித்து விவசாயி பிச்சன் விளக்கினார். திட்ட ஆராய்ச்சியாளர்கள் ராமனாதன், ராஜா, காளிதாசன் ஆகியோர் ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். 40 விவசாயிகள் பயன்பெற்றனர்.

**விவசாயிகளுக்கு பயிற்சி வகுப்பு**

வேதாரண்யம்: வேதாரண்யத்தில் தரமான விதை உற்பத்தி செய்வது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி வகுப்பு நடந்தது.நகராட்சி தலைவர் மீனாட்சிசுந்தரம் தலைமை வகித்தார். மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் யூசுப், நகராட்சி துணைத்தலைவர் சாகுல் ஹமீது ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் விதைகள் உற்பத்தி செய்வது குறித்து வேளாண் உதவி இயக்குனர் மணிவண்ணன், உதவி அலுவலர்கள் சிங்காரவேல், வேதரத்தினம் ஆகியோர் செயல்விளக்கம் அளித்தனர். பின்னர் விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கப்பட்டது. வேளாண் உதவி இயக்குனர் மணிகண்டன் வரவேற்றார். வேளாண் துணை அலுவலர் குணசேகரன் நன்றி கூறினார்.

**நெற்பயிருக்கு ஹெலிகாப்டரில் மருந்து விவசாயிகள் கூட்டத்தில் விவாதம்**

ராமநாதபுரம்:மாவட்டத்தில் நெற்பயிரில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கு ஹெலிகாப்டரில் மருந்து தெளிப்பது தொடர்பாக ராமநாதபுரத்தில் நடந்த விவசாயிகள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ராமநாதபுரம் கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. கலெக்டர் ஹரிஹரன் தலைமை வகித்தர். விவசாயிகள் பலரும் பங்கேற்றனர்.

அதிகாரிகள் விவசாயிகள் இடையே நடந்த விவாதம்:பாலசுந்தரமூர்த்தி: கண்மாய் பராமரிப்பு பணிகள் செய்ய வழங்கப்படும் நிதியை பாசன சங்கங்களுக்கு பொதுப்பணித்துறையினர் வழங்க வேண்டும்.
குருதிவேல்மாறன்(உதவிப்பொறியாளர்): நீர்பாசன சங்கங்களுக்கு நிதி வழங்கும் முறையில் சில சிக்கல்கள் உள்ளன. அதை களைந்தால் மட்டுமே மற்றவை பற்றி பேச முடியும்.
பாலகிருஷ்ணன்: இரண்டு ஒன்றியங்களில் மட்டும் பாதிப்பு உள்ளதாக கருதி, மற்ற பகுதிகளை புறக்கணித்துவிட கூடாது. மாவட்டம் முழுவதும் பயிர் சேதம் இருப்பதாக தகவல் வருவதால், ஆய்வு செய்ய வேண்டும்.
சுந்தரராஜன்: பூச்சியால் ஏற்படும் பாதிப்பையும் காப்பீட்டில் சேர்க்க வேண்டும். ஹெலிகாப்டர் மூலம் மருந்து தெளித்து பூச்சி தாக்குதலை தடுக்கலாமா?
சத்தியமூர்த்தி(வேளாண் இணை இயக்குனர்): ஹெலிகாப்டரில் மருந்துதெளிக்க வேண்டிய அவசியம் இல்லை. இந்நோய்க்கு அறிவிக்கப்பட்ட மருந்துகளை கை தெளிப்பான் மூலம் அடித்தாலே போதும், விதை தெளிப் பாதை பயன்படுத்துவதும் தவறாகும். ஏக்கருக்கு 200 லிட்டர் நீர் கொண்டு தெளித்தால் போதுமானதாகும்.
கலெக்டர்: பாதிக்கப் பட்ட இரண்டு ஒன்றியங்களை மட்டுமின்றி, மாவட்டங்களிலும் கட்டாயம் ஆய்வு மேற் கொள்ளப்படும். பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படும், என்றார்.
கூட்டுறவு சங்கங்கள் இணைபதிவாளர் பாபு, வேளாண் துணை இயக்குனர் ராஜேந்திரன், மாவட்ட பிற்படுத்தப்பட்ட அலுவலர் அப்துல்ஹமீதுகான், உதவி கலெக்டர்(பயிற்சி) மோகனசந்திரன் உட்பட பலரும் பங்கேற்றனர்.

**விவசாயம் பாதிப்பு இழப்பீடு வழங்க வேண்டுகோள்**

திருவாடானை:திருவாடானை தாலுகாவில் விவசாயம் பாதிக்கபட்டுள்ளதால் இழப்பீடு வழங்கவேண்டும் என ராமசாமி எம்.எல்.ஏ., கூறினார். அவர் கூறியதாவது: மாவட்டத்தின் நெற் களஞ்சியாக திருவாடானை தாலுகா விளங்குகிறது. விவசாயத்திற்கு அடுத்தபடியாக தான் மற்ற தொழில்கள் உள்ளன. இந்த ஆண்டு பருவமழை காலதாமதாகமாக துவங்கியதால் ,விவசாயிகள் விவசாய வேலைகளையும் காலதாமதமாக துவக்கினார்கள்.

தற்போது, பயிர் கள் நல்ல நிலையில் வளர்ந்து வரும் நிலையில், சில நாட்களுக்கு முன் செந்தாழை, புகையான் போன்ற நோய்கள் தாக்கியது. பூச்சி மருந்து அடித்து அந்த நோயிலிருந்து பயிர்கள் காப்பாற்றபட்டது. ஆனால், தற் போது நெற்பழம் என்ற நோய் தாக்குதல் தீவிரமடைந்துள் ளது. அறுவடைக்கு இன் னும் சில நாட்களே உள்ள நிலையில், இந் நோய் தாக்கியதால் நெற்கதிர்கள் மஞ்சள் பொடி போல உதிருகிறது.

இந் நோயிலிருந்து பயிர்களை காப்பாற்ற மருந்து இல்லாததால், விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற் பட்டுள்ளது. வறுமை கோட்டிற்கு கீழ் வாழ்பவர்கள் இப்பகுதியில் அதிமாக உள்ளனர். நகைகளை அடகு வைத்து செலவு செய்த விவசாயிகள் ஏராளமானோர் உள்ளனர். திருவாடானை தாலுகாவில் நெற் பழம் நோயால் விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட் டுள்ளதால், அரசு உடனடியாக நிவாரண வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் ,என்றார்.

**கால்நடை துறை உதவியாளர் சங்க கூட்டம்**

ராமநாதபுரம்:கால்நடை பராமரிப்பு துறை உதவியாளர் சங்க கூட்டம் கிளை செயலாளர் ஆசை தம்பி தலைமையில் நடந்தது. மாவட்ட செயலாளராக பூமிநாதன், இணை செயலாளராக முத்துகிருஷ்ணன், கோட்ட செயலாளராக ஜீவானந்தம், முருகேசன் தேர்வு செய் யப்பட்டனர். அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் கணேசமூர்த்தி, கால் நடை பராமரிப்பு துறை உதவியாளர் சங்க மாநில தலைவர் ஜெகதீசன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

தஞ்சாவூர்: மரபணு மாற்று விதைகளை தடை செய்ய வேண்டும். பிப்ரவரி இறுதிக்குள் தூர்வாரும் பணிகளை தொடங்க வேண்டும். தஞ்சையில் ஒருங்கிணைந்த வேளாண் துறை அலுவலகம் அமைக்க வேண்டும் என குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கேட்டுக்கொண்டனர்.தஞ்சையில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் கலெக்டர் சண்முகம் தலைமையில் நடந்தது. தலைமை வகித்து அவர் பேசியதாவது:
விவசாயிகள் நலன் கருதி நடப்பு பருவத்தில் 330 நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டுள்ளது. ஏ கிரேடு நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் ஆயிரத்து 100, பொது ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் ஆயிரத்து 50 வீதம் கொள்முதல் செய்யப்படுகிறது.கடந்த 27ம்தேதி வரை 30 ஆயிரத்து 553 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு உள்ளது. கடந்த ஆண்டு இதே நாளில் 1 லட்சத்து 66 ஆயிரத்து 986 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருந்தது. தஞ்சை மண்டல விவசாயிகளுக்கு ரூபாய் 3 கோடியே 28 லட்சத்து 71 ஆயிரத்து 250 நெல் கொள்முதல் செய்ய வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு கலெக்டர் பேசினார்.பின்னர் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் பேசிய விபரம்:ஜீவக்குமார்: கோடை நடவிற்கு அரசு விதைக் கிடங்குகளில் அதிசயப் பொன்னி எனப்படும் ஏ.டி.டி 43க்கு அடிப்படை விதைகள் கிடைக்கவில்லை. சான்றிட்ட விதைகள் மட்டுமே தனியார் கடைகளில் கிடைக்கிறது. எனவே இந்த விதை அரசு கிடங்குகளிலும் கிடைக்க ஆவனம் செய்ய வேண்டும்.சுகுமாரன் (ஒரத்தநாடு): கரும்பு டன் ஒன்றுக்கு ரூபாய் 2 ஆயிரம் வழங்க வேண்டும். ஆனால் இந்த ஆண்டு கரும்பிற்கு தமிழக அரசு டன் ஒன்றுக்கு ரூபாய் ஆயிரத்து 450 மட்டுமே வழங்கியுள்ளது. அதே போல் மத்திய அரசு நெல்லுக்கு அறிவித்த புதிய விலையை மாநில அரசு அறிவிக்க வேண்டும். கடந்த ஆண்டு நிஷா புயலால் பாதித்த பயிர்களுக்கு இன்சூரன்ஸ் தொகை வழங்க வேண்டும் என்பது உட்பட பல்வேறு கோரிக்கைகளை முதல்வர் கருணாநிதியிடம் தெரிவிக்க வேண்டும்.

தஞ்சை மாவட்ட விவசாயிகள் முதல்வரை சந்தித்து கோரிக்கைகளை தெரிவிக்க கலெக்டர் அனுமதி பெற்றுத்தர வேண்டும். அனுமதி கிடைக்கவில்லை என்றால் வரும் 14ம்தேதி முதல் தஞ்சையில் அனைத்து விவசாயிகளும் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுவோம்.சுந்தரவிமல்நாதன்: டெல்டா மாவட்டங்களில் ஆண்டுதோறும் கொள்முதல் நிலையங்களில் லஞ்சம் மற்றும் எடை மோசடி மூலம் விவசாயிகளிடம் இருந்து ரூபாய் 70 கோடி வரை முறைகேடு நடக்கிறது. இதை தடுக்க லஞ்ச ஒழிப்பு - ஊழல் தடுப்பு கண்காணிப்பு துறையினரை கொண்டு அடிக்கடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.ஜீவக்குமார்: தஞ்சை மாவட்டத்தில் வேளாண் தொடர்பான அரசு அலுவலகங்கள் இட மாறுதல் செய்யப்பட்டுள்ளது. அலுவலகங்களின் இடம் மாறுதல் தொடர்பான தகவல்களை விவசாயிகளுக்கு தெரிவிக்க வேண்டும். அதேபோல் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகங்கள் அமைக்கப்படுவது போல் காவிரி டெல்டாவின் இதயப்பகுதியான தஞ்சையில் ஒருங்கிணைந்த வேளாண் துறை அலுவலகங்கள் அமைக்க வேண்டும்.
தங்கவேல்: ஆம்பலாபட்டு பகுதியில் விவசாய பம்பு செட்டிற்கு மின் இணைப்பு வழங்குவதால் முன்பதிவு செய்தவர்கள் பட்டியலை வெளியிட வேண்டும்.

சந்திரன்: பட்டுக்கோட்டை பகுதியில் கோடைக்கால பயிர்க ளான கடலை, உளுந்து, எள் ஆகியவற்றிற்கு டி.ஏ.பி., ஜிப்சம் மருந்து வகைகளை மானிய விலையில் வழங்க வேண்டும்.

நடராஜன்: டெல்டா கடை மடை பகுதியில் சம்பா பயிர்கள் கதிர் வந்தும், வராத நிலை உள்ளது. எனவே பிப்.15ம்தேதி வரை மேட்டூர் அணை மூடாமல் பாசனத்திற்கு தண்ணீர் விட வேண்டும்.

சுந்தரவிமல்நாதன்: டெல்டா மாவட்டத்தில் வேளாண்மைக்கு 14 மணி நேரம் மட்டும் மின் விநியோகம் செய்யப்படுகிறது. துணை முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பின் படி 16 மணி நேரம் மின்சாரம் வழங்க வேண்டும். பொதுப்பணித்துறை சார்பில் தூர்வாரும் பணிகள் குறித்த விவசாயிகள் கருத்து அறியும் கூட்டம் உடனடியாக நடத்த வேண்டும். சம்பா அறுவடை முடிந்தவுடன் பிப். இறுதிக்குள் தூர் வாரும் பணிகளை தொடங்க வேண்டும்.ஜீவக்குமார்: பனிக்காலம், மழைக்காலம், குளிர்காலம் என்று பருவ நிலை மாறுதல்களால் நெல் பழம் என்ற புதிய நோய் ஏற்பட்டுள்ளது. இதனால் மகசூல் இழப்பு அதிக அளவில் ஏற்பட்டுள்ளது.

அறுவடை செய்யும் விவசாயிகளின் நெல் ஈரப்பதம் காரணமாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்வதில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது. எனவே இலக்கை அடைய ஈரப்பதம் அளவை 25 சதவீதமாக உயர்த்த வேண்டும்.பக்கிரிசாமி: பூதலூர் ஒன்றியம் செங்கிப்பட்டி பகுதியில் நூற்றுக்கும் அதிகமான பாசன ஏரிகள் உள்ளது.

இந்த ஏரிகள் பல ஆண்டுகளாக தூர் வாராமல் போய்உள்ளது. ஏரிகளை தூர்வார நூறுநாள் வேலைத்திட்டத்தில் போதுமான நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டும்.ஜீவக்குமார்: வரும் கோடைக்காலத்தில் தூர்வாரப்பட வேண்டிய பாசன நீர்நிலைகள் குறித்த தலைப்பில் மட்டும் சிறப்பு கூட்டம் நடத்த வேண்டும். வேளாண் பொறியியல் துறை டீசல் மானியத் திட்ட அறிவிப்பு தஞ்சை மாவட்டத்தில் இன்னும் அமல்படுத்தப்படவில்லை.எனவே இந்த திட்டத்தை விரைந்து அமல்படுத்த வேண்டும்.கோவிந்தராஜ்: வேளாண் பொறியில் துறை மூலம் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் ஆழ்குழாய் கிணறு அமைத்து கொடுக்க வேண்டும். பிற்பட்ட வகுப்பினர் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் கொடுக்கப்படும் ஆழ்குழாய் கிணறு திட்ட பயன்களை அனைவருக்கும் கிடைக்கும் வகையில் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.ரவிச்சந்திரன்: நெல் மற்றும் அனைத்து காய்கறி மரபணு விதைகளால் பல நோய்கள் உருவாகும். எனவே மரபணு மாற்று விதையை தடை செய்ய வேண்டும். வங்கிகளுக்கு கடன் கேட்டு செல்லும் விவசாயிகள் தரக்குறைவாக நடத்தப்படுகின்றனர்.(இவ்வாறு அவர் பேசிக் கொண்டிருந்த போது ராயமுன்டான்பட்டி பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் கூட்டுறவு கடன் வழங்க வேண்டும்

என்று கோரிக்கை விடுத்தனர். இதைக் கேட்டவுடன் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் இந்த ஆண்டு கூட்டுறவு கடன் வழங்க வாய்ப்பு இல்லை. அடுத்த ஆண்டு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்).
இதைக் கேட்டவுடன் அந்த பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் இந்த ஆண்டே கூட்டுறவு கடனை வழங்க வேண்டும் என்று கோரினர். இதனால் சிறிது நேரம் கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. உடனே கலெக்டர், சம்பந்தப்பட்ட அதிகாரியுடன் பேசி கூட்டுறவு கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியதை அடுத்து கூட்டத்தில் அமைதி ஏற்பட்டது.
கூட்டத்தில் நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மண்டல மேலாளர் பிச்சையா, வேளாண் இணை இயக்குனர் முருகன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சிவாஜி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) கலியபெருமாள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**விதை பெருக்கும் விதம்விவசாயிகளுக்கு பயிற்சி**

வாலாஜாப்பேட்டை:காவேரிப்பாக்கம் வேளாண் மை துறை சார்பில் விதை கிராம திட்டத்தின் கீழ் கொண்டாபுரம் கிராமத்தில் விவசாயிகளுக்கு பயிர் விதை பெருக்கும் விதம் குறித்து பயிற்சி நடந்தது.நிகழ்ச்சிக்கு வேளாண்மை அலுவலர் பாபு தலைமை வகித்து வரவேற்றார். வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ஜெயச்சந்திரன் விதை கிராம திட்டத்தின் நோக்கம், பயிர் உற் பத்தியில் கடைபிடிக்க வேண் டிய தொழில்நுட்பங்கள், விதை நேர்த்தி செய்தல், 2சதவீதம் டிஏபி.,கரைசல் தெளித்தல், உர மேலாண்மை முதலியவை குறி த்து விளக்கினார்.

**விவசாய கூட்டு குழுக்களுக்குகடன், கருவி வழங்கும் விழா**

வேலூர்:தக்கோலம் பகுதியை சேர்ந்த 4 விவசாய கூட்டு பொறுப்பு குழுக்களுக்கு. ரூ.3 21 லட்சம் கடன் தொகை மற்றும் விவசாய கருவிகள் வழங்கும் விழா நடந்தது.அரக்கோணம் அடுத்த தக்கோலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில், விவசாயிகள் கூட்டு பொறுப்புக்குழு உறுப்பினர்கள் ஆய்வுக்கூட்டம் மற்றும் உறுப்பினர் கல்வி திட்ட கூட்டம் நடந்தது.வேலூர் மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் மணிமாறன் தலைமை வகித்தார். கூட்டத்தில் 4 விவசாய கூட்டு பொறுப்பு குழுக்களுக்கு 3 லட்சத்து 20 ஆயிரத்து 990 கடன் தொகையும், விவசாய விதை தெளிப்பான் கருவிகள், விவசாய கருவிகள், பவர்ஸ் பிரேயர் ஆகியவை வழங்கப்பட்டது.விவசாய உறுப்பினர்களுக்கு என்னென்ன விவசாய உபகரணங்கள் வழங்கினால் பயனுள்ளதாக இருக்கும் என மண்டல இணைப்பதிவாளர் கேட்டார். அதற்கு "தட்டுப்பாடு இல்லாமல் உரங்கள் வழங்க வேண்டும்.

நாற்று நடும் இயந்திரம், வேர்கடலை தொடர்பான இயந்திரங்கள், விதைகள் விதைப்பு இயந்திரம் ஆகியவற்றை வாங்கித் தரவும், மண் பரிசோதனை செய்து தர ஏற்பாடு செய்ய வேண்டும்.நெல் கொள்முதல் செய்து சங்கத்திலேயே விற்பனை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். தரமான வீரிய விதை நெல் எண் 45, 43 வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கேட்டுக் கொண்டனர்.கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதாக மண்டல இணைப்பதிவாளர் உறுதி அளித்தார்.கூட்டத்தில் ராணிப்பேட்டை சரக துணை பதிவாளர் துளசிராமன், சங்க தனி அலுவலர் சந்திரசேகரன், கள அலுவலர் காந்திமதி, கள மேலாளர் சுந்தரவடிவேலு, சங்க செயலாளர் விஸ்வநாதன், வேலூர் மாவட்ட கூட்டுறவு ஒன்றிய வளர்ச்சி அலுவலர் கண்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**மிக நீண்ட இழை பருத்தி மார்க்கெட்டில் தனி 'மவுசு' : விவசாயிகள் மகிழ்ச்சி**

உடுமலை : மிக நீண்ட இழை பருத்தி ரகத்திற்கு, வெளிமார்க்கெட்டில் நல்ல விலை கிடைத்து வருவதால் உடுமலை பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.
உடுமலை பகுதியில் பி.ஏ.பி., நான்காம் மண்டல பாசனத்தில் மத்திய அரசின் சிறப்பு திட்டம் மற்றும் ஒப்பந்த சாகுபடி முறையில் விவசாயிகள் பருத்தி பயிரிட்டனர். இரண்டு வாரங்களுக்கு முன்பு பருத்தி அறுவடை துவங்கி தற்போது தீவிரமடைந்துள்ளது. கிராமங்களில் நேரடியாக பருத்தி கொள்முதல் துவங்கவில்லை. இந்நிலையில், வெளிமார்க்கெட்டில் பருத்திக்கு நல்ல விலை கிடைத்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கோவை, திருப்பூர் மாவட்டங்களில் விளையும் பருத்தியை விவசாயிகள் விற்பனை செய்ய அவிநாசியில் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் கொள்முதல் மையம் செயல்படுகிறது. இரண்டு வாரங்களாக மையத்தில் நடிக்கும் பருத்தி ஏலத்தில், மிக நீண்ட இழை பருத்திக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. மிக நீண்ட இழை பருத்தியான டி.சி.எச்., உட்பட ரகங்கள் குவிண்டால் 4, 600 ரூபாய் வரை விலை கிடைக்கிறது. நீண்ட இழை பருத்திக்கு 3,550 ரூபாய் வரையிலும், எல்.ஆர்.ஏ., ரகத்திற்கு 3,350 ரூபாய் விலை கிடைக்கிறது. உடுமலை பகுதியில் அதிகளவு மிக நீண்ட இழை பருத்தி ரகம் பயிரிடப்பட்டுள்ளது. இந்தாண்டு ரகத்திற்கு நல்ல விலை கிடைத்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.
விவசாயிகள் கூறியதாவது: பருத்திக்கு நிலையான விலை கிடைக்காததால் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு பல விவசாயிகள் மாற்றுப்பயிருக்கு மாறினர். தற்போது, மானியத்திட்டத்தின் கீழ் மீண்டும் பருத்தி பயிரிட துவங்கியுள்ளோம். சாகுபடி செலவு இந்த சீசனில் பல மடங்கு அதிகரித்துள்ளது. பருத்திக்கு நல்ல விலை கிடைக்காவிட்டால் ஏக்கருக்கு 15 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்படும். வெளிமார்க்கெட்டை போல நீண்ட இழை பருத்தி ரகத்திற்கு உள்ளூர் மார்க் கெட்டிலும் நல்ல விலை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் உள்ளோம் என்றனர்.

**விவசாயிகளிடம் குறைகேட்பு**

திருப்பூர் : திருப்பூர் கோட்ட அளவிலான விவசாயிகள் குறைகேட்பு கூட்டம், ஆர்.டி.ஓ., சையத் ஹுமாயூன் தலைமையில் நேற்று நடந்தது.
மாவட்டம் துவக்கப்பட்ட பின், கோட்ட அளவிலான விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் திருப்பூரில் நடக்கவில்லை. மாதம்தோறும் இரண்டாவது வெள்ளிக்கிழமை, கலெக்டர் அலுவலகத்தில், மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் மட்டும் நடந்தது. அக்கூட் டத்தில், சிறிய அளவிலான பிரச்னைகள் பற்றி விவசாயிகள் கூறியதை தொடர்ந்து, கோட்ட அளவிலான கூட்டம் மீண்டும் நடத்தப்படுகிறது. திருப்பூர் கோட்டத்தில் மாதம்தோறும் நான்காவது வெள்ளிக்கிழமை அன்று, விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
இதன்படி, திருப்பூரில் நேற்று நடந்த கூட்டத்துக்கு, குறைந்த அளவிலான விவசாயிகளே வந்திருந்தனர். முதல் கூட்டம் என்பதாலும், திருப்பூர் கோட்டத்துக்கு உட்பட்ட பல்லடம், திருப்பூர், அவிநாசி தாலுகா விவசாயிகள் என்பதாலும், ஏற்கனவே வைத்த கோரிக்கைகளே திரும்ப வைக்கப்பட்டன.
அவிநாசி பகுதியில், பல மாதங்களாக வழங்கப்படாமல் இருக்கும், காற்றில் பாதிக்கப்பட்ட வாழைகளுக்கான நஷ்ட ஈட்டுத்தொகையை உடனடியாக பெற்றுத் தர வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. கணபதிபாளையம் பகுதியில் செயல்படாமல் இருக்கும் துணை கால்நடை மருத்துவமனையை செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்; இடுவம்பாளையம் மற்றும் ஆண்டிபாளையம் வருவாய் கிராமங்களில் வி.ஏ.ஓ., பணியிடங்கள் காலியாக உள்ளன. கூடுதல் பொறுப்பாக கவனிக்கப்படுவதால், விவசாயிகளுக்கு தேவையான ஆவணங்களை உடனடியாக பெற முடிவதில்லை; முதல்வர் காப்பீடு திட்ட அடையாள அட்டை வழங்கும் பணி தாமதமாகிறது என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வைக்கப்பட்டன.
விளக்கமளித்த ஆர்.டி.ஓ., சையத் ஹுமாயூன், ""வாழைகளுக்கு நஷ்ட ஈடு வழங்க, முத்தரப்பு ஆலோசனை கூட்டம் அவிநாசியில் நடத்தப்பட்டு, அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இதர பிரச்னைகளுக்கு தீர்வு காண துரித நடவடிக்கை எடுக்கப்படும்," என்றார்.
திருப்பூர் தாசில்தார் மனோகரன், அவிநாசி தாசில்தார் முத்துராமலிங்கம் உட்பட பலர் பங்கேற்றனர்.

தினகரன்

**புவி வெப்பமடைதல் கருத்தரங்கு**

பதிவு செய்த நாள் 1/30/2010 6:52:24 AM

தேனி : தேனி நாடார் சரசுவதி கலை அறிவியல் கல்லூரியில், புவி வெப்பமடைதல் குறித்த கருத்தரங் கம் நடந்தது. கல்லூரி முதல் வர் சித்ரா தலைமை வகித் தார். மைக்ரோபயாலஜி துறைத் தலைவர் சரண்யா வரவேற்றார். வேதியியல் துறைத் தலைவர் சுதா, சிவ காசி காளீஸ்வரி கல்லூரி பேராசிரியர் ஜான்பால் பேசினர். மரங்களை அழிப்பதால் புவி வெப்பமயமாவது குறித் தும் இதனால் ஏற்படும் பா திப்பு குறித்தும் விளக்கினர். புவி வெப்பமயமடைதலை தடுக்க மரங்களை நடுதல், காற்றாலைகளை உபயோகப்படுத்துதல், வாகனப் புகையை குறைத்தல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை விளக்கி கூறினர். கருத்தரங்கில் 100 க்கும் மேற்பட்ட மைக்ரோபயா லஜி படிக்கும் மாணவிகள் கலந்து கொண்டனர்.

தினத் தந்தி DAILY THANTHI

### *கோவை மாவட்ட குறை தீர்க்கும் முகாம்:*
### *பி.டி.கத்திரிக்கு விவசாயிகள் எதிர்ப்பு*
### *வேளாண் பல்கலைக்கழகம் மீது சரமாரி குற்றச்சாட்டு*

*கோவை,ஜன.30–*
*கோவை மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் முகாமில் பி.டி கத்திரிக்கு விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்தனர்.*

*குறை தீர்க்கும் கூட்டம்*

*கோவை மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் கோவை மாவட்ட வளர்ச்சிமன்ற கூட்ட அரங்கில் நேற்று நடந்தது. கூட்டத்துக்கு கோவை மாவட்ட கலெக்டர் உமாநாத் தலைமை தாங்கினார்.*

*கூட்டத்தில் வேளாண்துறை அதிகாரிகள், வருவாய் அலுவலர்கள், மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

*கூட்டம் தொடங்கியதும் விவசாயிகள் சங்க தலைவர் வழுக்குபாறை பாலு பேசத்தொடங்கினார். அப்போது அவர்கூறியதாவது:–*

*பி.டி.கத்திரிக்கு எதிர்ப்பு*

*பி.டி.கத்திரிக்கு விவசாயிகள் அனைவரும் ஒட்டு மொத்தமாக எதிர்ப்பு தெரிவிக்கிறோம். கடந்த கூட்டத்தில் இதுபற்றிய எதிர்ப்பு தீர்மானத்தை முதல்–அமைச்சருக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று மாவட்ட நிர்வாகத்தை கேட்டுக்கொண்டோம். ஆனால் அந்த தீர்மானத்தை வேளாண் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைத்துள்ளனர். இதுபற்றி வேளாண்பல்கலைக்கழகம் எங்களுக்கு அனுப்பி உள்ள பதில் அறிக்கையில், சம்பந்தப்பட்ட துறை அதிகாரி கையெழுத்து எதுவும் போடவில்லை. மொட்டை கடிதாசிபோல் உள்ளது. இதில் இருந்து அவர்கள் பி.டி.கத்திரி பிரச்சினையில் அவர்கள் தப்பிக்க பார்ப்பது தெளிவாகிறது. இதுபற்றி கலெக்டர் முடிவு சொல்ல வேண்டும்(இந்த கருத்தைமற்ற விவசாயிகளும் வலியுறுத்தி சரமாரி குற்றச்சாட்டுகளை கூறினர்) இதற்கிடையே ஒருவிவசாயி மட்டும் பி.டி.கத்திரிக்கு ஆதரவாக கூறினார்.*

*சலசலப்பு*

*ஆதரவாக கூறிய விவசாயி திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்தவர், ஆனால் கோவை மாவட்ட*

விவசாயிகள்அனைவரும் எதிர்ப்பு தெரிவிக்கிறோம் என்று மற்ற அனைத்து விவசாயிகளும் கூறியதால் கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. ஆனால் ஆதரவு தெரிவித்த விவசாயி விடவில்லை, நான் இந்திய விவசாயி என்று கூறினார்.

இந்தநிலையில், கலெக்டர் உமாநாத் தலையிட்டு, நான் வேளாண்மை பல்கலைக்கழகத்திடம் இருந்து கையெழுத்து பெற்று தர ஏற்பாடு செய்கிறேன் என்றார். இதனால் சலசலப்பு அடங்கியது. பின்னர் விவசாயிகள் தங்களின் கோரிக்கைளை வலியுறுத்தி பேசினர். அதுபற்றிய விவரம் வருமாறு:–

ஆறுச்சாமி:–கோவை,திருப்பூர் பகுதியில் குளங்களுக்கு நீர்ஆதாரமாக விளங்கும் நொய்யல் ஆற்றில் இருந்து மினரல் பாட்டில் குடிநீர் தயாரிக்க தினமும் 5 லட்சம் லிட்டர் தண்ணீர் குழாய் மூலம் உறிஞ்சி எடுக்கின்றனர். இதை அதிகாரிகள் கண்டுகொள்ளாமல் உள்ளனர். இந்தநிலை தொடர்ந்தால் விரைவில் நொய்யல் ஆற்று படுகை பாலை வனமாக மாறிவிடும் அபாயம் உள்ளது.

உரத்தட்டுப்பாடு

கதிரவன்:–தொண்டாமுத்தூர் ஒன்றியம் தாளியூர் மலை பகுதியானைமடுவு என்ற இடத்தில் தடுப்பணை கட்ட ரூ.40 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் இதுநாள் வரை எந்த பணியும் நடக்காமல் கிடப்பில் போடப்பட்டு உள்ளது. தடுப்பணை அமைக்கும் பணியை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அம்பிகா பழனிச்சாமி:– தோட்டக்கலை துறை மூலம் விவசாயத்துக்கு அளிக்கப்படும் இலவச உரம் தட்டுப்பாட்டில் உள்ளது. ஆகவே பற்றாக்குறை இல்லாமல் விவசாயிகளுக்கு உரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வி.எம்.துரைசாமி:– நேபிட் மூலம் நமது மானியத்தில் தேங்காய் பருப்பு கொள்முதல் செய்வதை கால நீட்டிப்பு செய்ய வேண்டும். மற்றும் கொப்பறை கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும்.

குளங்கள் மாசு

வழுக்குபாறை பாலு:–கோவை செல்வபுரம், தெலுங்குபாளையம், பேரூர் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில் அனுமதி பெற்று, பெறாமல் இயங்கும் சாயப்பட்டறைகள் கோவை பெரியகுளம், குறிச்சி குளங்களை மாசுப்படுத்துகின்றன. புதுப்புது வியாதிகள் ஏற்படுகிறது. இதற்கு மாசுகட்டுப்பாட்டு வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மற்றும் கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தையில் வியாபாரிகள் ஆக்கிரமிப்பு உள்ளது. உழவர் அடையாள அட்டையில் போலிகளின் நடமாட்டம் உள்ளது. ஆகவே போலி அடையாள அட்டையை வைத்துள்ளவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

உறுதிமொழி

முன்னதாக மகாத்மா காந்தியின் நினைவு தினத்தை முன்னிட்டு அரசு அலுவலர்கள், ஊழியர்கள், விவசாயிகள் கலெக்டர் உமாநாத் தலைமையில் தீண்டாமை உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். 2 நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தினர்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மூர்த்தி, துணை கலெக்டர் (வண்ண தொலைக்காட்சிபெட்டி) சீனிவாசன், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் பிரசன்ன வெங்கடேஷ், மக்கள் தொடர்பு அலுவலர் கண்ணதாசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.